Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# The Life of Shepherdess in Tamil Literature: A Characteristic Approach

**T. Gnanasakthi**, Research Scholar, PTMTM College, Kamuthi, Alagappa University, Karaikudi-3, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-4270-807X**
**DOI: 10.5281/zenodo.6621038**

## Abstract

*The novel is the by-product of prose given birth by the Renaissance and tends to be a well-established, popular and emerging literary genre in the realm of literature since the outset of the 20th century. Statistically speaking, novels in terms of publication come out much higher in numbers than any other genre. Of them, only countable novels get treated best, put on the top list and earned timeless significance. The success of a novel seldom lies in buying and selling in more amounts but in its dealings with social issues. It seems to be a comfortable and effective way in which writers are enabled to employ the novelistic elements; plot, characterization, dialogue, action, events, style and view of life altogether. Keethari, a Tamil novel, picturises the lives of shepherds in all aspects and which an untouched and yet to be spoken part is the life of a shepherdess. Hence, this article deals with the said aspect and investigates to what extent the novel form helps the writers to produce their works with the delineation of socio, economic and political problems.*

**Keywords:** Humanity, Marital life, Feminism, Womanly vices, Epistemological violence.

## References

[1] Alderson.U.S, *Unakul Unnaithedu*, Kannadasan Publication, Chennai -17. 2000
[2] Ramalingam.M. *Naaval Valam Punaikadhai Valam*, Tamil Writers Association. Chennai.1973
[3] Kailasapathi. K. *Tamil Naval Illakiyam*. New Century Book House, 4th edition, Chennai-77 1987.
[4] Kurunthogai, *Ilakkiya Nilayam*, 19, Sawrastra Nagar, Chennai 72. November 1983.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

**செங்காந்தள்**

*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்*



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# தமிழ் இலக்கியங்களில் கீதாரி மகளிர் வாழ்வியல் சித்திரிப்பு

**த. ஞானசக்தி**, முனைவர் பட்ட ஆய்வாளர், ப.தி.மு.தே.கல்லூரி, கமுதி,

அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-3, தமிழ்நாடு, இந்தியா.

**ORCiD: https://orcid.org/0000-0002-4270-807X**

**DOI: 10.5281/zenodo.6621038**

**ஆய்வுச் சுருக்கம்**

*நாவல் என்ற இலக்கியத்தின் மிகப் பெரும் வளாச்சி இன்று மக்கள் மத்தியில் வரவேற்பினைப் பெற்றுள்ளது. வளர்ந்து வரும் இலக்கிய வகைகளுள் ஒன்று நாவல் இலக்கியம். இருபதாம் நூற்றாண்டு தொடங்கி நாவல்கள் எண்ணற்ற அளவில் தோன்றிக் கொண்டிருக்கின்றன. எவ்வளவு நாவல்கள் தோன்றினாலும் காலத்தைக் கடந்து நிற்கும் நாவல்கள் என விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலே ஒவ்வொரு ஆண்டும் படைக்கப்படுகின்றன. சமூகம் பிரச்சனைகளை நாவலாகப் படைக்கும் போது மக்கள் அதனை எவ்வாறு புரிந்து செயல்படுகிறார்கள் என்பதைக் கொண்டு நாவலின் வெற்றியினை கனித்துவிடலாம். படைப்பாளாகள் தங்கள் எண்ணங்களையும், கற்பனைகளையும் வெளியிட மறுமலாச்சி யுகம் பெற்றெடுத்த கலைவடிவதட என்பது நாவல். மேலும் கதை மாந்தர்களையும் அவர்களுடைய வாழ்கையைப் பாதிக்கும் நிகழ்ச்சிகளையும் மறைமுகமாக வெளிப்படுத்தும் நடையபுகையும் தன்னகத்தே கொண்ட சீர் உரைநடைப் படைப்பே நாவல் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தும் நடப்பியல் நாவல்களே சமூகத்தை சரியாக சித்தரிக்கும் வலிமையோடு நிகழ்கின்றன என்பதை விளக்குவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*

**கருச் சொற்கள்:** கீதாரியின் குடும்ப உறவு, மனிதநேயம், திருமணபந்தம், பெண்களின் அவலநிலைகள்.

**முன்னுரை**

இலக்கியத்தின் மிகப்பெரும் வளர்ச்சியானது இந்திய மக்கள் மத்தியில் வரவேற்பினைப் பெற்று, வளர்ந்து வரும் இலக்கிய வகைகளுள் ஒன்றான நாவல் இலக்கியம் சிறந்து விளங்குகிறது. நாவல் என்பது காலத்தால் உருவான கலை வடிவம். சமூகப் பிரச்சனைகளை நாவலாகப்படைக்கும் போது மக்கள் அதனை எவ்வாறு புரிந்து செயல்படுகிறார்கள் என்பதை நாவலின் வெற்றியினைக் கொண்டு கனித்துவிடலாம் என்பதை வெளிப்படுத்தும் பொருட்டு ஆடுமேய்ப்பவர்களின் காட்டு வாழ்க்கையின் அவல-அலங்கோலங்களுக்குள்ளும், சிக்கல்-சிரமங்களுக்குள்ளும், பின்னல்-பிடுங்களுக்குள்ளும், நுழைந்து, புகுந்து, கலந்து நாவலாசிரியர் சு.தமிழ்ச்செல்வி ஒரு கண்ணீர் காவியத்தைக் கடைந்தெடுத்துத் தந்திருக்கிறார். வெறும் கண்ணீரை வெளியில் தருவது வீண், காட்டுக்குள் கல்வி அறிவு இல்லாமல், உலக நடைமுறை தெரியாமல் வெறும் ஜடங்கள் போல் வாழ்கின்ற கீதாரிப் பெண்களின் சங்கடத்தைத் தீர்க்கின்ற படலங்கள் உருவாக்கப்படவேண்டும் என்பதே ஆய்வின் நோக்கமாகும்.

**கீதாரி நாவலின் குடும்ப உறவு**

கீதாரி நாவலில் ராமுகீதாரி இருளாயி, வெள்ளைச்சாமி கரிச்சா, சேது, ராமாயி போன்ற குடும்பங்களின் வாயிலாக குடும்ப உறவானது காட்டப்பட்டுள்ளது. ஆடுமேய்க்கும் இடையர் குலத்தைச்

சேர்ந்த ராமு கீதாரியும் இருளாயியும் கிடை போட்டு அந்த வருமானத்தில் வாழ்க்கை நடத்தி வரும் வேளையில் வெள்ளைச்சாமியும் அவனைத் தொடர்ந்து கரிச்சாவும், சிகப்பியும் அவர்களைத் தஞ்சமடைய அவர்களுக்காகவே இறுதிவரை போராடும் படைப்பாக ராமுகீதாரி படைக்கப் பட்டுள்ளார்.

**ராமாயியின் அவலநிலை**

வெள்ளைச்சாமியின் பெற்றோராகிய சேதுவும், ராமாயியும் விதிவசத்தால் குடும்பத்தைப் பிரிந்து சுந்தரமூர்த்தி சேர்வையிடம் தஞ்சமடைய, சேர்வையின் கரிசனமான பேச்சு அவளை வெகுவாகக் கவர்ந்ததால் சேர்வையுடன் நெருங்கி பழக ஆரம்பித்தாள். ராமாயின் குழந்தைகளுக்கு குச்சிரொட்டி வாங்கிக் கொடுப்பதோடு, அவளிடமும் அக்கரையாய் பேசியதால், கணவனின் பாராமுகம் அவளை மிகவும் சோர்வடையச் செய்திருந்த நேரத்தில் சேர்வைக்கும் ராமாயிக்கும் ஒரு பெண் பிள்ளையும் பிறந்தது. பிள்ளை அச்சு அசலாய் சேர்வையின் சாயலிருப்பதாய் சில பெண்கள் வெளிப்படையாய் பேசவும் தொடங்கினார்கள். பேசுபவர்களின் மீது ஆத்திரப்பட்டான் சேது. இருந்தாலும் தன்நிலையை எண்ணி தானே வருத்தப்பட்டான். **“பொழுதோட தூங்கறவனுக்கு பொண்டாட்டி இல்ல. விடிஞ்சி தூங்குறவனுக்கு வெள்ளாம இல்லங்கிறது எவ்வளவு உண்மையாருக்கு” என்று எண்ணி எண்ணி மருகினான் (ப.37)** பொண்டாட்டியைக் கூட மன்னித்து ஏற்றுக்கொள்ளலாம் இன்னொருவனுக்கு பிறந்த பிள்ளைக்கு நானெப்படி அப்பனாய் இருந்து வளர்ப்பது என்ற கோபமே அவனை நிம்மதியில்லாமல் அலையவைத்தது. அவனால் எதுவும் செய்ய முடியவில்லை கடைசியாய் நடந்த்து நடந்துபோச்சி யாம்மேலயும் தப்புருக்குறத்தாலவுடுறன் இனிமே அந்த சேர்வையோட நிழல்கூட ஒம்மேல படக்கொடாது சொல்லிப்புட்டன் ஒழுங்கா குடும்பத்த நடத்துற வேலயப்பாரு” என்று தன் மனைவி ராமாயியை அழைத்து வைத்துக் கண்டித்தான். அவளும் பெருமாள் கோயில் மாடுபோல தலையாட்டினாள். ஆனால் ராமாயி - சேர்வை பழக்கம் தொடரவே நேரில் பார்த்த சேது உலக்கையால் அடித்தே கொன்றுவிட்டு கடன் தொல்லையால் தானும் தூக்கில் தொங்கினான். இரண்டு ஆண் குழந்தைகளும் அனாதையாக்கப்பட்டார்கள். ராமாயின் தவறான பழக்கத்தால் குடும்பமே அவலநிலைக்கு ஆளானது என்பதை இந்நாவல் வலியுறுத்துகிறது.

**இருளாயியின் மனிதநேயம்**

இருளாயியும் அவளது கணவன் ராமுகீதாரியும் வலசையில் இருக்கும் போது மாலைவேளையில் நிறைமாதக் கர்ப்பிணியான பைத்தியக்காரப் பெண்ணொருத்தி பிரசவ வலியோடு அவர்களைத் தஞ்சமடைகிறாள். அந்தப் பெண்ணின் அலறல் சத்தம் அதிகமாகிக் கொண்டே இருந்த்து.

**“தங்களுடைய குடும்ப பெண்ணொருத்தி படும்**
**துன்பமாக நினைத்து அத்தனை பேரும் கலங்கிப்போய்**
**நின்றார்கள்”(கீதாரி ப.19)**

இறுதியில் தனது கணவர் ராமுகீதாரியே பிரசவம் பார்த்தார். அவள் இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள்.

ஊர் பெரிய மனிதர்களில் ஒருவர் கூட அக்குழந்தைகளை எடுத்து வளர்க்க முன் வராததால்.

**“இருக்கப்பட்டவகல்லாம் யோசிக்கிறிக நாங்க அலஞ்சி திருஞ்சி காவயத்து கஞ்சி குடிக்கிறவக, இதுகள காப்பாதின தெண்டத்துக்கு நாங்களே வளர்த்துக்கிர்றம். இந்த பொடியன் இவங்கொட என் மவன் இல்ல. இதுமேரி ஆய, அப்பம் இல்லாத அனாதப் இதுகளையும் வளர்த்துட்டுப் போறோம்”**

> **“வருசம் மூச்சூடும் ஓடி ஓடி கடகட்டப்படுற சாதியில வந்து பொறந்து கட்டமேண்டு நான் யாவ்விதிய நெனச்சிக்கிட்டு கெடக்குறன் ஓஞ்சி ஒழிஞ்சி ஒக்கார வளியுண்டா” எனக்கு “யாண்டி இப்படி அலுத்துக்கிர்ற நீ பெத்த புள்ளைண்டா இப்படி அலுப்பும் சலிப்பும் படுவியா? இதுகளும் நம்ம புள்ளைகதாண்டி நம்ம செய்யிற நல்லது வீண் போவாதுடி” “ஆமா தன்னோட பொறக்காதவன் சத்துரவாதி தாம் பெறாத புள்ள மதாயப்புள்ளம்பாவோ இந்தப் புள்ளைகள வளத்துத்தான் நான் சொவத்த தேடிக்கிடப் போறானாக்கும்.” (கீதாரி ப.25)**

இருளாயி இப்படி சலித்துக் கொண்டாலும் பிள்ளைகள் விஷயத்தில் ராமகீதியை விடவும் அதிகமாய் அக்கறையோடு பிள்ளைகளை பார்த்துப் பார்த்து கவனிப்பதில் குறை வைக்காமல், அடுத்தவர் வீட்டு பிள்ளையென்று நினைக்காமல் பாசத்தைக்கொட்டி வளர்த்த அவளின் மனிய நேயத்தை அறிய முடிகிறது.

**கரிச்சாவின் திருமண பந்தம்**

கரிச்சா வயதுக்கு வந்தவுடன் ராமுகீதி-இருளாயி அவளுக்கு மணமுடித்து வைக்க எண்ணினார்கள். மாப்பிள்ளை வீட்டாரும் அவளைப் பிடித்து விட்டது. முறைப்படி பேச வேண்டியது எல்லாவற்றையும் பேசியபின் மாப்பிள்ளையின் தந்தையார் கரிச்சா வெள்ளைச்சாமியிடத்து வளர்ந்ததால் அவளது கற்பின் மேல் சந்தேகம் கொண்டு,

> **“கம்முனாட்டி வளத்த பெண்ணாயிருந்ததலே தீட்டுத்துணியை பார்த்துப்புட்டுத்தான் முடிவச் சொல்வுவம். ஒரு மாசம் முந்தி பிந்தி ஆனால் ஆவட்டும் குளிக்கிற கெடுவுல சொல்லிவுடுங்க, யாம் பொண்டாட்டிய வரச்சொல்லுறன். தீட்டுத் துணியை பாத்துட்டுத்தான் சம்மதத்தச் சொல்லுவம்” (கீதாரி ப.97)**

என்றுரைக்க ஆத்திரமடைந்த ராமுகீதாரி அவர்களை விரட்டிட்டு கரிச்சாவை வெள்ளைச்சாமிக்கே மணமுடிக்க எண்ணுகிறார். சொந்த சித்தப்பனுக்கே பெண்ணை மணமுடிக்கும் வழக்கம் கீதாரி வாழ்க்கை முறையின் ஒரு அங்கமாகவே இருந்து வருகிறது.

> **“சித்தப்பன் மொறயில பெண்ணைக் கட்டுறது புதுசில்ல நம்மளுக்கு மச்சி பெத்த மயங்குறமேரி எத்துணையோ பேரு கட்டியிருக்காக (கீதாரி ப.98)**

என்று கூறி

> **“அடராமண்ணா வெள்ளைச்சாமியே யாங் வீணாக்கூப்புட்ட அலக்களிக்கிறிய பொண்ணுதாங் அங்கருக்குல்ல. பேசாம பய ஆடுமேயக்கிற தடிக்கம்ப வாங்கிக்கொண்டவச்சி தாலிய கட்டச் சொல்லுங்களேன்” (கீதாரி ப.100)**

என்று யோசனை சொல்ல, அதன்படியே அத்தடிக்கம்பை வைத்து அவர்களிருவருக்கும் திருமணம் நடத்தி வைத்தார் கீதாரி. இடையர்களின் வாழ்க்கை முறையில் சொந்த சித்தப்பனுக்கே மகளை மணமுடித்து வைக்கும் பழக்கம் உள்ளதென்பதும், மணமகளுக்கு பதிலாக அவன் பயன்படுத்தும் கோலைக் கொண்டு மணமுடித்து வைக்கும் பழக்கம் உள்ளதென்பதும் அறிய முடிகிறது.

**சிகப்பியின் அவலநிலை**

சிகப்பியை சாம்பசிவத்தின் மனைவிகளிருவரும் வேலைக்காரியென்று கூட மதிக்கவில்லை. அடிமை நிலையிலே வைத்திருந்தனர். ஐந்தாவது வரையாவது படித்துவிட வேண்டுமென்று நினைத்தாள். ஆனால் சாம்பசிவத்தின் முதல் மனைவியுடைய குழந்தைகள் ஒழுங்காய் படிக்கவில்லை.

தான்பெற்ற பிள்ளைகளே படிக்காத போது இந்த அனாதைப் பெண் படிக்க வேண்டுமென்ற எண்ணத்தில்

**"நீ படிச்சி என்னத்த கிளிக்கப்போற ஊட்டோடகெட" (கீதாரி ப.64)** என்றுரைப்பாள். இரண்டாவது மனைவியோ அவளுடைய மகனை பள்ளிக் கூடத்தில் யாரும் அடித்துவிடாமல் பார்த்துக் கொள்ளவும். அடிக்கடி சட்டையோடு கழிந்து வைக்கும் அவனை கைகால் கழுவி விடவும் சட்டையை கசக்கி காயவைத்துப் போடவும், சிகப்பி பள்ளிக்கூடம் போவதுதான் நல்லதென்று நினைத்தாள்.

மூத்தவளின் சூழ்ச்சியால் படிப்பு தடைப்பட்டது. அவள் வளர, வளர வீட்டு வேலைகளும், வயல் வேலைகளும் அதிகமாகி நிற்கக்கூட நேரமில்லாமல் வேலை செய்து கொண்டேயிருப்பாள். இருவருடைய போட்டி பொறாமைகளாளும் பாதிக்கப்படுகிற சிகப்பி தனக்கு ஏற்படுகிற சின்ன சின்ன ஆசைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாத அவலத்தின் மொத்த பிறப்பிடமாய் விளங்குகிறாள். சிகப்பி வயதுக்கு வந்தவுடன்

**"கன்னித்தீட்டு வீட்டைத்துடைத்துவிடும் அவளை**
**வீட்டிற்குள் விட்டால் அவர்களின் சாமிக்கு ஒத்துக்**
**கொள்ளாது வீட்டுச்சாமி வெளியேறிவிடும் (கீதாரி ப.70)**

என்று அவளையோ, அவளுடைய துணிமணிகளையோ தொடுவதில்லை. மாடு அடைக்கும் கொட்டத்தில் தங்க வைக்கப்பட்டாள். அவள் வயதுக்கு வந்தது முதல் சாம்பசிவம் தன்னிடம் நடந்து கொள்ளும் விதம் பற்றி

**"அப்பா மின்னாடிமேறி இல்ல**
**குடிச்சிட்டு வந்துட்டா வெறிக்க வெறிக்க பாக்கிறாரு**
**அவரப் பாக்கவே பயமாருக்கு தங்கச்சி" (கீதாரி ப.76)**

கரிச்சாவிடம் தன் அவல நிலைய கூறுகிறாள்.

ஒரு நாள் குடித்து விட்டு வந்த சாம்பசிவம்,

**"ஒந்தங்கச்சியை வளத்த சித்தப்பங்காரனே**
**அட்ட குட்டிய கட்டிகிட்டப்ப எடுத்து வளத்த நான்**
**ஒன்ன தொடக்கொடாதா?" (கீதாரி ப.112)**

என்று கூறி அவளை துவசம் செய்து விட்டான். தன் தந்தையைப் போன்று நினைத்தவனிடமே தன் கற்பை பறிகொடுத்த அவள் தன் வேதனையை யாரிடமும் சொல்ல முடியாத அவலத்தில் து}க்குப்போட்டுக் கொண்டு தன் உயிரை மாய்த்துக் கொண்ட சிகப்பியின் ஒழுக்கமானது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**கரிச்சாவின் அவல நிலை**

தாய் இல்லாத கரிச்சாவிற்கு இருந்த உறவென்று சிகப்பி மட்டுமே இருந்தாள். அவளுடைய இழப்பும் இவளுக்கு பேரிடியாக இருந்தது. கரிச்சாவுக்கு குழந்தை பிறக்கவில்லை என்பதைக் காரணமாக்க்காட்டி வெள்ளைச்சாமியின் உறவினர்கள் அவளை வசைபாடினர். அவனும் தன் உறவினர்கள் மீது கொண்ட மோகத்தால் கண்டுகொள்வதேயில்லை. சிந்திக்கும் திறனை இழந்துபோனான். **"வெள்ளைச்சாமி குட்டிவிற்கும் பணம், புழுக்கை விற்கும் பணம், கிடைக்கூலி எல்லாவற்றையும் தன்னுடைய அண்ணனின் குடும்பத்திற்கே அழித்துக்கொண்டிருந்தான். குடும்பத்தைப்பற்றியும், கரிச்சாவைப்பற்றியும் அவன் நினைத்துப் பார்ப்பதேயில்லை" (கீதாரி ப.151)**

வெள்ளைச்சாமிக்கு மறுமணம் நிச்சயிக்கப்பட்டவுடன் அவனை விட்டுப் பிரிந்து ராமுகீதாரியிடமே தஞ்சமடைகிறாள். இருளாயியும் இறந்துபோக கீதாரியுடன் இணைந்து ஓட்டாடு ஓட்டி புழுக்கை விற்று வாழ்க்கை நடத்துகிறாள். "எனக்கு ஓயாம தலயசுத்திக்கிட்டேயிருக்கு நரசம்மா அத நிப்பாட்டுறமேரி மாத்தர தாறியளா?" என்று கேட்ட கரிச்சாவின் கையைப் பிடித்துப் பார்த்த நர்சோ, அவளை சோதித்துப் பார்த்துவிட்டுச் சொன்னத கரிச்சாவால் நம்பவே முடியவில்லை. "டாக்டரம்மா நெசமாவா சொல்லுறியா?" படபடத்தாள் கரிச்சா. "ஆமாம்மா நீ இப்ப மூனுமாசம் கர்ப்பமா இருக்குறம்மா" என்றார் டாக்டர்.

கரிச்சா கொஞ்சமும் எதிர்பார்க்காத விஷயமிது. இந்த விஷயம் வெள்ளைச்சாமிக்குத் தெரிந்தால் என்ன செய்யுமென்ற ஒரு கணம் நினைத்துப் பார்த்தாள், ச்சே, என்ன புத்தி என்று தன்னையே கடிந்து கொண்டாள்.

**"ஏலேய் ராசாப்பயலே ஆடுமேய்க்க வந்திட்டிகளா? என்ற அப்பாவிடம், "அவனயெல்லாம் ஆட்டுப்பக்கமே நாடவுடக்குடாதுப்பா. நம்ப படுற செருமயோட இருக்கட்டும் அவனுக்கெல்லாம் வேண்டாம் இந்த பொளப்பு (கீதாரி ப.167)**

கீதாரிக்கு வயதாகிக் கொண்டே வருவதை எண்ணி,

**"கடவுளே அப்பாவுக்கு இன்னும் நெறய ஆயுசக்குடு அவர எங்க கிட்டேருந்து கூட்டிக்கிட்டுப்பெயிறாத தள்ளாம கட்டுலோட கெடந்தாலும் கெடக்கட்டும். ஆளுன்னு அவுக இருந்துட்டாப் போரும்" (கீதாரி ப.171)**

என்று, தான் அனாதையாக்கப்பட்டு விடுவோமா என்ற பயம் கலந்த அவலம் நிறைந்தவளாய் காணப்பட்டாள். மழையில் தன் கூண்டிற்குள் தண்ணீர் வர கரிச்சா நிறைச்சலோரமாய் தேங்கியிருந்த நீரை வழிந்து இறைக்கும் போது அவ்ஓரத்தில் கிடந்த பாம்புக் குட்டி ஒன்று அவளை கடித்துவிட இருட்டில் பனையோலைக்கும், பாம்புக்குட்டிக்கும் வித்தியாசம் தெரியாத அவள் பனைமட்டைதான் குத்தியது என்றென்னி படுத்தவள் எழும்பவேயில்லை. அவளது பிறப்பும், இறப்பும் அவலத்தோட தொடங்கி அவலத்தோடவே இறுதி வரைக்கும் நிம்மதி அற்ற வாழ்க்கை வாழ்ந்து இருக்கிறாள்.

**நிறைவுரை**

ஆடு மேய்த்து கிடைத்தொழில் புரியக்கூடிய இடையர்களின் வாழ்க்கைப் போராட்டத்தையும். மழை, வெயில், பனி என அனைத்தையும் வெட்ட வெளியில் எதிர்கொள்ளும் வாழ்க்கை துயரமும், அவலமும் நிறைந்த்தாக காணப்படுவதோடு, மனைவியின் உணர்வுகளை புரிந்து கொள்ளமடியாமல் அவளையும் கொன்று கடனுக்காக பிள்ளைகளை அனாதைகளாக்கிவிட்டு தற்கொலை செய்து கொள்ளும் அவலமும், அப்பா என்றழைத்த ஒருவனே தன்னை நாசம் செய்து விட்டதை வெளியில் சொல்ல முடியாமல் தூக்குப்போட்டுக் கொண்டு இறந்துவிடும் பெண்ணின் ஒழுக்கமும் குழந்தை இல்லை என்பதை காரணம் காட்டி வேறு திருமணம் செய்ய நடவடிக்கையெடுப்பதை யறிந்த பெண்ணின் வேதனையும், அவனைப் பிரிந்து தன்மானத்தோடு தந்தையிடமே தஞ்சமடைந்து இறந்து போகும் பெண்ணின் அவலமும், பெண்ணின் பெருமைகளாக விளக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நாவலானது கிடைத்தொழிலினால் இடையர்குல மகளிர் அடையும் அவலத்தின் மொத்த கொள்ளிடமாய் படைக்கபட்டுள்ளது.

**துணை நூற்ப்பட்டியல்**

[1] ஆல்டாசன், யு.எஸ்.உனக்குள் உன்னைத்தேடு, கண்ணதாசன் பதிப்பகம், சென்னை, 2000.

[2] இராமலிங்கம்.மா, நாவல் வளம் புனைகதைவளம், தமிழ் எழுத்தாளா கூட்டுறவு சங்கம், சென்னை. 1973.

[3] கைலாசபதி.க தமிழ் நாவல் இலக்கியம், நியுசெஞ்சுரி புக் ஹவுஸ் நான்காம் பதிப்பு, சென்னை -77, 1987.

[4] குறுந்தொகை, இலக்கிய நிலையம், 19, சௌராஷ்ரா நகர், சென்னை-72, நவம்பர்- 1983.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.